[1970 செப்டம்பர் 5

Shifting of High Court to Kancheepuram

* 245 *Q.*—THIRU K. SAHADEVA KANDER, THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to shift the High Court to Kancheepuram; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்தை காஞ்சிபுரத்திற்கு மாற்ற வேண்டும் என்று சொன்னதற்குக் காரணம், தற்பொழுது உயர்நீதி மன்றம் ஜன நெருக்கமுள்ள, சந்தடியுள்ள இடத்தில் இருக்கிறது. அம்மாதிரியான சூழ்நிலையில் இல்லாமல் சென்னைக்கு வெளியே உயர்நீதி மன்றம் அமைக்கப்பட்டால், நீதிபதிகள் நல்ல முறையில் அமைதியான சூழ் நிலையில் செயல்பட துணையாக இருக்கும் என்றுதான் இந்தக் கேள்வி போட்டேன். இப்பொழுதில்லை என்றாலும், இனியாவது இது குறித்து பரிசிலனை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினர் காஞ்சியை நோக்கிச் செல்வதிலே மகிழ்ச்சி.

திரு. என். வரதராஜன். பல மாநிலங்களில் உயர்நீதி மன்றங் களில் ஒரு சில பிரிவுகளை வேறு சில மாவட்டங்களில் தலைநகரங் களிலே வைத்திருக்கிறார்கள். அதுபோல தென் மாவட்டங்களின் தலைநகரமாகிய மதுரை நகரத்தில் உயர்நீதி மன்றத்தின் ஒரு பிரிவை வைப்பதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது நல்ல கொள்கை. அரசாங்கத்தின் சார்பிலே நாம் உயர்நீதி மன்றத்தினிடம் அடிக்கடி இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம். மற்ற மாநிலங் களில் இருப்பதைப்போல் ஒரு பிரிவு மற்ற மாவட்டங்களின் தலை நகரங்களில் இல்லாவிட்டாலும், காம்ப் கோர்ட்டு என்ற முறையில், ரிட் ஜுரிஸ்டிக்ஷன் இருக்கிறது. கிரிமினல் அப்பீல் இருக்கிறது, அதைப் போலவே சிவில் அப்பீல் இருக்கிறது. மிஸலேனியஸ் அப்பீல் இருக்கிறது. இது போன்ற வழக்குகளை விசாரிக்கக்கூடிய நீதிபதிகள் தனியாக அங்கே இருக்கிறார்கள் உயர்நீதிமன்றத்தில், அப்படிப்பட்ட வழக்குகள் வருகிறபொழுது, தென் மாவட்டங்களை பொறுத்த அளவுக்கு அந்த வழக்குகளையெல்லாம் ஒரு நாள், இரண்டு நாள் அல்லது ஒரு வாரம் மதுரை நகரத்தில் விசாரிப் பதற்கு ஏற்பாடு செய்தால், தென் மாவட்டங்களிலுள்ள மக்களுக்கு வசதியாக இருக்கும் என்ற ஒரு கருத்தை உயர்நீதி மன்றம் ஏற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கையில் வற்புறுத்தி வருகிறோம்.

திரு. கே. விநாயகம் : செங்கை மாவட்டத் தலைநகரத்தை ஏற்கனவே இருந்த இடத்தை விட்டு இப்பொழுது காஞ்சிபுரத்திற்கு மாற்றியதின் விளைவாக, இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு

1970 செப்டம்பர் 5]

செங்கற்பட்டு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டையும் அது மாதிரி மாற்றி விடுவார்களோ என்று ஒரு பயம் ஏற்பட்டிருக்கிறது. அதை மாற்ருமல் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது உயர்நீதி மன்றத்தை மாற்றுவது பற்றிய கேள்வி.

திரு. கே. விநயகம்: அதோடு தொடர்புடையதுதான். அதை மாற்ருமல் இப்பொழுதிருக்கின்ற ஸ்டேடஸ் கோ, அதாவது அப்படியே செங்கற்பட்டில் இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினர் செங்கற்பட்டில் ப்ராக்டீஸ் செய்யவில்லை என்பது எனக்கு நன்ருகத் தெரியும். அவர்களை நிச்சயம் பாதிக்காது. எல்லா கட்சியினரும் சேர்ந்து எடுத்த முடிவின்படி நீதிமன்றங்கள் செங்கற்பட்டில் தொடர்ந்து இருக்க வேண்டும். தலைநகரம் காஞ்சிபுரத்தில் இருக்க வேண்டும் என்பதுதான். ஆகவே, இப்போதைக்கு அதை மாற்றப் போவதில்லை. நீதி மன்றங்களை மாற்றுவது பற்றி நாமாகவே முடிவு எடுக்காமல், மக்களுடைய வசதிகளுக்கு ஏற்றவாறு; பரந்த அளவிலே இருக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய அரசாங்கத்தின் நோக்கம். இதுபற்றி முடிவு செய்ய ஒரு மாவட்ட நீதிபதி, ஒரு ஐ.ஏ.எஸ். அலுவலர் கொண்ட குழு ஒன்றை அமைத்து, நீதி மன்றங்களின் முறை, நீதிமன்றங்களின் நிர்வாக அளவு, ஜூரிஸ்டிக்ஷன் இருக்கிற முறை, அதாவது ரீ-அலைன்மெண்டு, டிஸ்ட்ரிபியூஷன் ஆஃப் கோர்ட்ஸ் இரண்டையும் பரிசீலித்து சிபார்சு செய்ய வேண்டுமென்று முடிவு செய்திருக்கிருேம். அந்த சிபார்சுகள் வந்தவுடன்தான் மாற்றுவது பற்றி பரிசீலனை செய்யப்படும். புதியதாக நீதி மன்றங்களைத் திறக்கும்பொழுது மக்களுடைய வசதிகளைக் கருத்தில் கொண்டு திறக்கிருேம். இருக்கின்ற நீதிமன்றங்களை இப்போதைக்கு மாற்றுவது கிடையாது என்ற கொள்கையை நம்முடைய அரசு எடுத்திருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சார், நமது அரசாங்கத்தின் பரிந்துரைமீது, உயர்நீதி மன்றம் ஏதாவது கருத்துத் தெரிவித்திருக்கிறதா? கருத்து தெரிவித்திருந்தால், அது என்ன நிலையில் இப்பொழுது இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைமை நீதிபதியோடு அடிக்கடி பேசி வருகிருேம். அவர்கள் பல சங்கடங்கள் இருப்பதைச் சொல்லுகிருர்கள். கட்டடங்கள் இல்லை. என்கிருர்கள். இப்பொழுது கட்டடம் வந்திருக்கின்றன. பிறகு நூலக வாய்ப்பு இங்கிருப்பது போல் இல்லை என்கிருர்கள். அதோடு இங்கே சிறந்த—மதுரை வழக்கறிஞர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது—வழக்கறிஞர்கள் இருக்கிருர்கள். இப்படி ஒரு வாதத்தை அவர்கள் வைக்கிருர்கள். இதெல்லாம் காலப்போக்கில் மன மாற்றம் ஏற்படும் என்கிற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. தென் மாவட்டங்களுக்கு, ஒரு காம்ப் கோர்ட்டாவது இருக்க வேண்டும்; ஒரு சாதாரண கிரிமினல் அப்பீல், பெயில் போன்றவற்றிற்குக் கூட பல

மைல்கள் சென்னைக்கு வரவேண்டிய நிலைமை நம் நாட்டு மக்களுக்கு இருக்கிறது. நாங்கள் இது தவிர்க்கப்பட வேண்டும் என்கிறோம். ஆனால் எதிர்க்கட்சிகளும் இது பற்றி உற்சாகத்தோடு பேசினால், நிச்சயம் அதுவரும் ஆனால் அப்படி அவர்கள் பேசியதாக நான் கேள்விப்படவில்லை.

Temporary Courts for Tindivanam

* 246 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether temporary Civil Courts are being set up in Tindivanam from November, December 1969 ; and

(b) the reasons therefor?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) திண்டிவனத்திலுள்ள மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் முடிவுபெறாத வழக்குகள் அதிகமாக இருந்ததனால் கூடுதலாக தற்காலிக மாவட்ட முன்சீப் நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஏற்பளிப்பு வழங்கப்பட்டது. கூடுதலான இம்மாவட்ட முன்சீப் நீதிமன்றம் 1969, டிசம்பர் திங்கள் 22 ஆம் நாளிலிருந்து செயலாற்றத் தொடங்கியது.

காஞ்சீபுரம், வட ஆர்க்காடு, சாரம் கூட்டுறவு நூற்பாலைகள்

*247 வினு—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள (1) காஞ்சீபுரம், (2) வட ஆர்க்காடு, (3) சாரம் கூட்டுறவு நூற்பு ஆலைகளில் ஏற்படும் நஷ்டத்தை தவிர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வட ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலையில் ஏற்பட்ட நஷ்டம், கணக்கில் ஏற்பட்ட நஷ்டமாகும். இந்த ஆலையின் நெருக்கடி நிதி, அதன் நஷ்டத்தை விட அதிகமாகும். இந்த ஆலைகளில் நஷ்டத்தைத் தவிர்க்க, உற்பத்தியைப் பெருக்கவும், பஞ்சு கொள்முதலில் கவனத்தை அனுசரிக்கவும், தொழிலாளர்களிடமிருந்து அதிகப்படியான ஒத்துழைப்பைப் பெறவும், முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

திரு. கே. விநயகம் : சார், வட ஆர்க்காட்டில் ஏற்பட்டிருக்கிற நஷ்டம் கணக்கில் ஏற்பட்டது என்று சொன்னர்களே, ஸ்பின்னிங் மில்லை இது பாதிக்காதா? Is it accounting deficiency? தென் ஆர்க்காட்டில் ஏற்பட்டிருக்கிற நஷ்டம் இருக்கிறது. நாம் நடத்தும் தொழில்களில் நஷ்டம் கணக்குப் பார்த்த பிறகு தெரிகிறது. தனியார்களிடம் விடுவதனால், இப்படி நஷ்டம் ஏற்படாது, அதற்கு அவர்களுடைய திறமைதான் காரணம் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?